ஸ்ரீ:

# இருத்தும் வியந்துக்கு முன்பு ஆழ்வார் பிழைத்த மூன்று தத்துக்கள்

டாக்டர் ஸர் கே. எஸ். கிருஷ்ணன், புதுதில்லி.

---

1. **ஸ்ரீ ராமாநுஜன்** புரட்டாசி இதழில் நம் ஸ்வாமி அண்ணா எழுதிவரும் தன்சரிதையில் நான்காம் பகுதி ஸேவிக்கப்பெற்றேன். நம் தர்சனத்துக்கு அண்ணா செய்து வருமுபகாரம் வாசாமகோசரம். கமர்பிளந்த அடியேன் போல்வாருடைய நெஞ்சமும் மறுநனையும்படி ஸ்வாமி பண்ணிவரும் க்ருஷி, பேச்சுக்கு நிலமாமோ? தலையல்லால் கைம்மாறில்லை.

2. அதேயிதழில் தொடர்பாக வெகு ரஸமானதும் அர்த்தபுஷ்டியுள்ளதுமான ஒரு வியாஸம் வெளிவந்திருப்பதும் நம் ஸ்வாமிக்கு அஸாதாரணமான செயற்கரிய செய்யும் குணத்தை விசதீகரிக்கிறது. ஸேவாகாலங்களில் "பிறந்தாருயர்ந்தே" என்ற கோஷம் தணிவதற்கு முன்னமேயே "உயர்வறவுயர்நலம் உடையவன்" என்ற கோஷமும் எழுவதையும், இது பல்லாண்டு பல்லாண்டாகச் செல்ல வேணுமென்ற கோஷ்டி மங்களாசாஸநத்தையும் நினைப்பூட்டுகிறது.

3. சில மாதங்களுக்குமுன் ஆசார்ய ஹ்ருதயத்தில் மூன்று தத்துக்குப் பிழைத்து, பின் மறுவலிடாதபடி பரிஹ்ருதமான அருவினை நோயைப்பற்றி ஒரு சிறு வ்யாஸம் எழுத ஆரம்பித்தேன். வெளிநாட்டு யாத்ரை நேர்ந்ததாலும், வேறு சில காரணங்களாலும் அவ்வியாஸம் அச்சேறும்படி பூர்த்தியாகாமல் நின்று விட்டது. கீழ்ப்ரஸ்தாவித்த நம் அண்ணா ஸ்வாமியின் வ்யாஸத்தை ஸேவித்த பிறகு அடியேன் எழுதிய வ்யாஸத்துக்கு ஆவச்யகதையில்லை. ஆயினும் "இருக்குவாய் முனிக்கணங்களேத்த யானுமேத்தினேன்" என்கிற கணக்கில் வெகு விநயத்துடன் அதில் சில பாகங்களை இங்கு விஜ்ஞாபிக்கிறேன். 'நாவினுக்காற்றேன்' என்பதுமுண்டே,

4. மஹாபாரதத்தின் பெருமையைக் கொண்டாடும்போது இங்கில்லாதது வேறோரிடத்திலுமில்லை; இங்குள்ளதே வேறிடங்களிலுமுள்ளது என்றொரு கூற்றுண்டு, திருவாய்மொழியையும் அதற்கு நம் பூர்வாசாரியர்கள் அருளிச்செய்த வ்யாக்யானங்களையும் ஸேவித்தவர்களுக்கு பகவத் விஷயத்தைப்பற்றிய மட்டில் இப்

பெருமை இவற்றுக்கே அஸாதாரணமானது என்பதும், மஹாபாரதம் போன்ற நூல்களுக்குங்கூட இது உபசார வார்த்தை என்பதும் அடியேன் சொல்ல வேண்டுவதில்லை. "எண்திசையுமறிய இயம்புகேன்" என்று கோஷிக்க வேண்டிய முடிவுகளிலொன்று இது. பகவான் என்கிற சொல் மற்றவர்களுக்கு உபசாரவார்த்தையாய் எம்பெருமானுக்கே அஸாதாரணமானுப்போல, பகவத்விஷயம் என்கிற சொல்லும் திருவாய்மொழி வ்யாக்யானங்களுக்கே அஸாதாரணமானது. ஆழ்வார் பாசுரங்களை அருளிச்செயல் என்று நிர்தேசித்துப்போருவதுபோல, அருளிச்செயல் வ்யாக்யானங்களை பகவத்விஷயம் என்று நம்மவர்கள் நிர்தேசித்துப் போருவதும்.

> "முந்துறவே பிள்ளான் முதலானோர் செய்தருளும்
> அந்த வியாக்கியைக ளன்றாகில்—அந்தோ
> திருவாய்மொழிப்பொருளைத் தேர்ந்துரைக்கவல்ல
> குருவார் இக்காலம் நெஞ்சேகூறு,"

என்றநுஸந்தித்திருந்த மாமுனிகளையும் "இப்புவியிலரங்கேசர்க் கீடளித்தான்" என்றும் "முப்பத்தாறாயிரப் பெருக்கர்" என்றும் நாம் அநுஸந்தித்துப் போருவதனால், ஒருமிடறாகப் பேசும் அந்த வ்யாக்யானங்களுள் நாம் விசேஷித்துக் கொண்டாடிப்போருவது ஈடு என்பதும் தேறிநின்றது. ஆழ்வார்களுள் நம்மாழ்வாரை அங்கியாகவும் மற்றையாழ்வார்களை அங்கமாகவும் நாம் கொள்வது போல மற்றெல்லா வ்யாக்யானங்களுக்கும் ஈட்டைத் தலையாகக் கொள்வது மிகையாகாது.

5. ஈடு ப்ரவசனத்துக்கு வருவதற்கு வெகு காலத்துக்குமுன், முதன்முதலாக வடக்குத் திருவீதிப்பிள்ளையிடம் ஈடு ஸேவித்தவர்கள் அவருடைய திருக்குமாரர்களிருவருமாவர். ஆகையால் இவர்களுடைய க்ரந்தங்களில், அதிலும் விசேஷித்து* செய்ய கலையாம் ஸ்ரீவசனபூஷணத்திலும், அருளிச்செயல்களின் ப்ராதுர்ப்பாவ விசேஷமான ஆசார்யஹ்ருதயத்திலும் அருளிச்செயல் மணம் எங்கும் கமழ்வதோடுகூட அன்றலர்ந்த ஈட்டின் பரிமளமும் கலந்து வரும். "ஆசார்ய பரம்பராப்ராப்தங்களான அர்த்தங்களில் அவர்கள் தாங்கள் கௌரவாதிசயத்தாலே ரஹஸ்யமாக வுபதேசித்துப் போந்தவையாய், அருமை பெருமைகளைப்பற்ற, இதுக்கு முன்பு தாமும் ப்ரகாசிப்பியாமல் அடக்கிக்கொண்டு போந்தவையுமான அர்த்தவிசேஷங்களெல்லாத்தையும்..................ஸ்ரீவசநபூஷணமாகிற இப்ரபந்தமுகேந வெளியிட்டருளுகிறார்" என்பது மாமுனிகளுடைய வ்யாக்யாநாவதாரிகை. "பிள்ளை பலகாலுமருளிச் செய்யக் கேட்டிருக்கையாயிருக்கும்" என்பது ஸ்ரீவசநபூஷண ஸ்ரீஸூக்தி. இங்கு பிள்ளை என்பது தமக்காசார்யரும் திருத்தமப்பனருமான வடக்குத்

திருவீதிப்பிள்ளையை. அதேபோல "இது (அருளிச்செயல்) தானும் த்ராவிடவேததயா விஸ்தீர்ணமாய் அநேகார்த்த ப்ரதிபாதகமா யிருக்கையாலே இதில் தாத்பர்யார்த்தம் ஸர்வர்க்கும் ப்ரதிபத்தி விஷயமாகை அரிதென்று பார்த்து, இதில் அர்த்தவிசேஷங்களையும் இவற்றில் ஆழ்வார் திருவுள்ளக்கருத்தின் ப்ரகாரத்தையும் இவ் வாசார்ய ருசி பரிக்ருஹீதமான அர்த்தமே யெல்லார்க்கும் தஞ்ச மென்னுமத்தையும், இவர் தம்முடைய பரமக்ருபையினலே ப்ரகா சிப்பியா நின்று கொண்டு ஆசார்ய பரம்பராப்ராப்தமான இவ்வர்த் தங்கள் எல்லார்க்கும் ப்ரதிபத்தி யோக்யமாம்படி அநதிஸங்க்ரஹ அநதிவிஸ்தரமாக இவ்வாசார்ய ஹ்ருதயப்ரபந்தமுகேந அருளிச் செய்கிறார்" என்பது மாமுனிகளுடைய அவதாரிகை. ஆகவே இவ் விரண்டு க்ரந்தங்களிலும் ஈட்டின் பரிமளம் எங்கும் கமழ்வது இயல்பு. இது தனித்துப் பரக்க எழுதவேண்டிய விஷயங்களி லொன்று. அத்திருமணம் கமழ்வதை மட்டுமே இங்கு பரஸ்தா வித்து விட்டு ப்ரக்ருத விஷயத்துக்குச் செல்வோம்.

6. அரங்கேசர்க்கீடளித்தவர் தாமே இவ்விரண்டு க்ரந்தங்களுக் கும் வ்யாக்யானமருளிச் செய்திருப்பது மிகப்பொருத்தமானதோடு கூட இவ்விரு க்ரந்தங்களுக்கும் ஈட்டுக்கும் உள்ள தொடர்பை த்ருடீகரிக்கும்.

7. ஆகவே பலகால் ஈடு ஸேவித்து அதின் ரஸங்களில் ஊறி யிருப்பவர்களுக்கே இவ்விரண்டு க்ரந்தங்களினுடைய தனிப் பெருமைகள் தெரியலாவது. இக்ரந்த சூர்ணைகளில் ஸந்திக்தங் களான அர்த்தங்களெல்லாம் ஈட்டு ஸ்ரீஸூக்திகளைக் கொண்டு நிர்ணயித்து ஒருங்கவிடும்படியாயிருக்கும்.

8. ஆனல் இவ்விரு க்ரந்தங்களுக்கும் வ்யாக்யானமருளிச்செய்த மாமுனிகள் தாம் அரங்கேசர்க்கீடளிக்கும்படி ஈட்டின் விசேஷார்த் தங்களில் மூழ்கியவராய், "மன்னியசீர் மாறன்கலை யுணவாகப் பெற்றோம்..........முன்னவராம்நங்குரவர் மொழிகளுள்ளப்பெற்றோம் முழுதும் நமக்கவை பொழுது போக்காகப் பெற்றோம்" என்று ததேகப்ரவணராய், விசதவாக்சிகாமணியுமாகையாலே, ஸ்ரீவசன பூஷண—ஆசார்யஹ்ருதய சூர்ணைகளின் அர்த்தநிர்ணயத்துக்கு ஈட்டுப்பங்க்திகளுக்கும் போக வேண்டாதபடி இவருடைய வ்யாக் யான பங்க்திகள் அமைந்திருக்கின்றன.

9. ஸ்ரீவசநபூஷணத்தில் "இவன், புண்யத்தைப்பாபமென்றிருக் கும்; அவன் பாபத்தைப் புண்யமென்றிருக்கும்; அவனுக்கு அது கிடையாது; இவன் அது செய்யான்" என்ற 280-வது சூர்ணை யின் வ்யாக்யானத்தில் மாமுனிகளருளிச் செய்வதாவது "ஆச்ரிதர் செய்தகுற்றம் நற்றமாகவே கொள்ளும் அதிமாத்ர வத்ஸலனான ஈச்

வரன், இவ்வதிகாரி ஏதேனுமொரு பாபத்தைப் பண்ணிலும் அத்தைக் குற்றமாக நினையாதே நற்றமாக நினைத்து உகந்திருக்கும்; அவனப்படி யிருந்தானேயாகிலும், இவ்வதிகாரி பாபவ்ருத்தியிலந்வய மற்று, நியதனாய் வர்த்திக்கையாலே, பாபத்தைப் புண்யமாகக் கொள்ளும் வத்ஸலனானவனுக்கு அது ஆசைப்பட்டுப் போமித்தனை யொழியக் கிடையாதென்கை" என்று. இது "லோக நாத: புரா பூத்வா ஸுக்ரீவம் நாத மிச்சதி" என்ற ஸ்ரீ ஸூக்திக்கு, "கிடைப்பது, கிடையாதொழிவது, முந்துறமுன்னம் இச்சியா நின்றார்" என்ற வ்யாக்யானத்தை நினைப்பூட்டுகிறது, அது போலவே ஸ்ரீவசநபூஷண ஆசார்ய ஹ்ருதய சூர்ணைகளில் ஸந்திக்தங்களான அர்த்தங்களை ஈட்டுப் பங்க்திகளைக்கொண்டு நிர்வஹிக்கலாம்படியாக விருந்தும் அது தேவையில்லாதபடி விசதவாக்சிகா மணிகளுடைய வ்யாக்யானம் அமைந்திருக்கையாலே, ஈட்டுப் பங்க்திகளைக் கொண்டு நிர்வஹிப்பது ஆசைப்பட்டே போவதோடு நின்றிருக்கும்.

10. ஆனால் இவ்வாசையும் ஒருவாறு தீரும்படி எம்பெருமான் செய்துபோரும் மாயங்கள் சிலவுண்டு. அவைதான் அச்சேறுவதிலுண்டான ப்ரமாதங்களாகும். இவை காரணமாக அக்ஷரங்களோ, பதங்களோ, வாக்யங்களோ விடுபட்டும், மாருடியும் சிதைந்தும் வருவது இயல்பு. அதனால் மணவாள மாமுனிகளுடைய வ்யாக்யான பங்க்திகளின் சுத்த பாடம் எது என்று நிர்ணயிக்க வேண்டிய இடங்களும் சிலவுண்டு. நாம் விசேஷித்து ஆசார்ய ஹ்ருதயத்தைக் கொண்டாடுவதற்குக் காரணம் நாயனார் அருளிச் செய்கிற வாக்யங்களெல்லாம் அருளிச்செயல் சந்தைகளாகவே இருப்பதோடுகூட, வ்யாக்யான அவதாரிகையில் மாமுனிகளருளிச் செய்தபடி "முகமறிந்தவன் கோத்த முத்து பெருவிலையனாமாப் போலே சந்தைகளைத்தாம் சேர்த்த சாதுரியாலே அருளிச்செயலில் ரஸஜ்ஞர்க்கு இதில் அர்த்தத்திலுங் காட்டில் சப்தந்தானே மிகவுமினிதாயிருக்குமென்று." அருளிச் செயலில் ப்ரவேசமில்லாத ஒரு வித்வான் இதை அநந்வித க்ரந்தம் என்று கைவிட்டதாக ஓர் ஐதிஹ்ய முண்டு. இதிலொரு ஆச்சரியமுமில்லை. இம்மாதிரியான க்ரந்தமும் அதன் வ்யாக்யானமும் அச்சேறுவதி லுண்டான ப்ரமாதங்கள் அநேகம். தவறியோ, அல்லது மாறியோ, அல்லது நசுங்கியோ, அல்லது உடைபட்டோ போன முத்துக்களைத் திரும்பக்கொண்டு முகமறிந்து கோப்பது ஈட்டுப் பங்க்திகளிலூன்றி யிருப்பவர்களுக்கே இயலுவது.

11. பல வருஷங்களாக நம் ஸ்வாமி அண்ணா ஆசார்ய ஹ்ருதயத்தின் மூலத்திலும் வ்யாக்யானத்திலும் பண்ணிவரும் பாடபரிஷ்காரம் வைஷ்ணவ உலகு நன்கறிந்தது. புதுக் கோவில்கள் கட்டுவதைக் காட்டிலும் ஆழ்வாராசார்யர்களால் மங்களா சாஸநம் பண்ணப் பெற்றுள்ள புராதனக் கோவில்களை ஜீர்ணோத்தாரணம் பண்ணுவ

தைப் பேருபகாரமாக வைஷ்ணவ கோஷ்டிகளில் கொண்டாடுவதுண்டு. அதுபோன்ற வுபகாரம் நம் அண்ணுபண்ணிவரும் ஆசார்ய ஹ்ருதய பாடபரிஷ்காரம்.

12. இது நிற்க; இங்கு எடுத்த விஷயத்துக்கு வேண்டுவதாவது ஆசார்ய ஹ்ருதய சூர்ணைகளின் அர்த்தங்களை விசதமாக அறிவதற்கு மாமுனிகளுடைய வ்யாக்யான பங்க்திகளே போதுமானவை யாஞலும், அச்சுப்ரமாதத்தால் மூலத்திலும் வ்யாக்யாநத்திலும் பாட நிர்ணயத்திற்காகவாவது நாம் ஈட்டுப் பங்க்திகளில் பலதுறைகளிலும் குடைந்தாட நேர்கிறது, என்பதுதான். ஆழ்வாருடைய மூன்று தத்துக்களைப்பற்றிய விசாரம் கீழ்க்கண்ட முடிவிற்குப் பொருந்திய உதாரணம். ஸ்ரீ ராமாநுஜனிலும், அம்ருதலஹரியிலும், வேறிடங்களிலும் இந்த மூன்று தத்துக்களைப்பற்றிய விசாரம் சில மாதங்களாக நடந்து வருவதால், சில முக்கியமான அம்சங்களை மட்டும் இங்கு விஜ்ஞாபிக்க விரும்புகிறேன்.

13. இந்த மூன்று தத்துக்களைப்பற்றிய ப்ரஸ்தாவம் எழுவது ஆசார்ய ஹ்ருதயத்தில் எட்டாம் பத்தின் ஸாரமருளிச் செய்யுமிடத்தில். "தித்திக்கவுள்ளே யுறைந்து" என்று ஆரும் திருவாய் மொழியின் ஸாரமருளிச் செய்து, "கண்டு கொண்டிருந்து அமானுஷ போகமாக்கினவன் மூன்று தத்துக்குப் பிழைத்த அருவினை நோய் மறுவலிடாமல் சிறியேன் என்றதின் பெருமையைக் காட்ட" என்பதை அதன் பின் வரும் இருத்தும் வியந்து, கண்கள் சிவந்து திருவாய் மொழிகளின் ஸாரமாக அருளிச் செய்கிறுர் அழகிய மணவாளப் பெருமாள் நாயனுர்.

14. ஈட்டில் ஆழ்வார் அகலப்பார்ப்பதை அயோக்யதாநு ஸந்தானத்தால் வந்த நோயாகக் குறிப்பிட்டிருந்தாலும், இச்சூர்ணையிலோடுகிற ரஸத்துக்குச் சேர அகல நினைப்பதற்கடியான அயோக்யதாநு ஸந்தானத்தையே நோயாகக் கொள்வர் மாமுனிகள். இது முதன் முதலாகத் தலையெடுத்தது வளவேழுலகிலாகையாலே அகல நினைப்பதற்கடியான அயோக்யதாநு ஸந்தான நோயை வளவேழுலகு என்றும், அந்நோய்வாய்ப் படக்கூடிய ஆழ்வாரை வளவேழுலகிலாழ்வாரென்றும் நம்மவர்கள் நிர்தேசிப்பது.

15. கீழ் எடுத்த ஆசார்ய ஹ்ருதய சூர்ணையின் வ்யாக்யான பங்க்திகள் சரியாகத் தெரிந்தால், ஆழ்வார் பிழைத்த மூன்று தத்துக்கள் எவை என்ற கேள்விக்கு / விசதமாக அவ்வியாக்யான பங்க்திகளில் கிடைக்குமென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. பதில் /

16. வெகு நாளைக்கு முன் அச்சிடப்பட்ட தமிழ் தெலுங்கு பதிப்புகளில் இவ்விடத்து வ்யாக்யானத்தில் வளவேழுலகு, பொருமா நீள்

படைத்திருவாய்மொழிப் பாசுரங்களே உதாஹரிக்கப்படுகின்றன. இப்பதிப்புகளிலுள்ள வ்யாக்யான பங்க்திகளே சுத்தமான பாடமானல், மூன்று தத்துக்களும் இவ்விரண்டு திருவாய் மொழிகளிலேயே அடங்கியுள்ளன என்றும், அதிலொன்றில் இரண்டு தத்துக்களுள்ளன என்றும் கொள்ள இடமுண்டு. இப்படியே கொண்டு வளவேழுலகில் ஆழ்வார் அயோக்யதாநுஸந்தானம் பண்ணி இருமுறை அகலப் பார்த்தாரென்றும் அங்கேயே இரண்டு தத்துக்கள் நேர்ந்தன என்றும் சிலர் நிர்வஹித்துப் போருவர்கள்.

17. ஆசார்யஹ்ருதய க்ரந்தவ்யாக்யான பாடபரிஷ்காரம் பண்ணிவரும் க்ரமத்தில், ஸ்ரீகோசங்களை சோதித்து நம் அண்ணு அருளிய உபகாரம் இவ்விடத்திலுமுண்டு; அதாவது அச்சேறிய பழைய பதிப்புகளில் சில வ்யாக்யான பங்க்திகள் நழுவி விட்டதைக் காட்டியுள்ளார். மூன்று தத்துக்களை விவரிக்குமிடத்தில் வளவேழுலகு, பொருமா நீள்படை, பாசுரங்களைத்தவிர, அந்தாமத்தன்பிலுள்ள "அல்லாவியுள் கலந்த", "என் முடிவுகாணுதே என்னுள் கலந்தானை" என்ற பாசுரங்களும் இந்த பாடத்தில் காணப்படுகின்றன. ரயிலேறும்போது மூட்டைகள் தவறுவதுபோல, ஸ்ரீகோசங்கள் அச்சேறும்போது சில பதங்களோ வரிகளோ தவறுவது இயல்பாகையாலே ஸ்ரீகோசங்களில் காண்கிற அதிக பங்க்திகளோடு கூடிய பாடமே சுத்தபாடமாகக் கொள்ளத்தக்கது என்றும், அப்படிக்கொண்டால் வளவேழுலகிலும், பொருமாநீள்படையிலும், அந்தாமத்தன்பிலும், முறையே மூன்று தத்துக்களும் நேர்ந்தனவாகத் தேறுமென்றும், அப்படிக்கொள்வதே ப்ரகரணங்களுக்குச் சேருமென்றும், ஈட்டு ஸ்ரீஸூக்திகளைக் கொண்டு தெளிவுபட பஹுமுகமாக நிர்வஹித்துள்ளார் நம் ஸ்வாமி அண்ணு.

18. வளவேழுலகின் முதற்பாட்டில் ஆழ்வார் அருவினையேன் என்னுமிடத்தில் அவர் அருவினையாகக் குறிப்பிடுவது தன்சிறுமை பாராதே எம்பெருமானுடன் ஸம்ச்லேஷிப்பதாகத் துணிந்த தம்முடைய ப்ரேமாத்யவஸாயத்தை; அகலப்பார்ப்பதற்கடியான அயோக்யதாநுஸந்தானத்தையல்ல. அவ்வநுஸந்தானம் ஒரு நோயென்று அவர் கொண்டதெல்லாம் இதற்குப்பின்தான். ஆனுலும் அருவினை நோய் என்ற ஆசார்யஹ்ருதயகாரரின் சொற்கள் வளவேழுலகு தலையெடுப்பதற்கடியான இப்பாட்டை ஸூசிப்பதாகக் கொள்ளக் குறையில்லை.

19. மேலும் ஆசார்ய ஹ்ருதயகாரருக்கே அஸாதாரணமான சைலிக்கேற்ப, "மூன்று தத்துக்குப் பிழைத்த அருவினைநோய்" என்ற சொற்கள் வளவேழுலகில் "அருவினையேன்", "வினையேனே", "வினையேன் வினைதீர் மருந்தானுய்", "மாயோம்", "தீர்ந்து தன்

பால் மனம் வைக்க", "இல்லேபரிவதே" என்ற பாசுரங்களுக்கும், பொருமாநீள்படையில் "இனியென்ன குறைவினம்", "மேல்மற்ருேர் நோயும் சார்கொடான்", "என்ஃனவிடான் நம்பி நம்பியே" என்ற பாசுரங்களுக்கும் ஸ்சேகமாயிருப்பதோடுகூட, வைகுந்தாவில் "உன்னடியார்க்குத்தீர்த்து", "நாம்மருவி", "நாம் மகிழ்ந்தாட" "உள்ள நோய்களெல்லாம் துரந்து", "உய்ந்து போந்திருந்தே", "வெந்தீவினேகளே நாசம் செய்து", "முன்னேத்தீவினேகள் முழுவே ரரிந்தனன்", "செடியார் நோய்களெல்லாம் துரந்து" என்ற அநேக பாசுரங்களுக்கும் ஸ்சேகமாயிருக்கும்,

20. ஆனல் வளவேழுலகிலும் பொருமாநீள்படையிலும் நேர்ந்த தத்துக்களும் அவற்றுக்குப் பரிஹாரமும் ஒருபடி. அந்தாமத்தன்பில் தத்து நேர்ந்தபடியும், அது பரிஹ்ருதமானபடியும் வேறு. வளவேழுலகிலும் பொருமாநீள்படையிலும் அயோக்யதாநுஸந்தானம் பண்ணி அகலப்பார்த்த ஆழ்வாரை, அவரையன்றிச் செல்ல வொண்ணுத தன்னுடைய வ்யாமோஹத்தைக் காட்டிப் பரிஹரித்தான் எம்பெருமான். அந்தாமத்தன்பில் நேர்ந்தது வேறுபடி. ஆழ்வார் அகலநிஃனத்திலராகிலும் ஆடியாடியிலார்த்தியெல்லாம்தீர பூர்ணமாக ஸம்ச்லேஷம் நடவாநிற்கச்செய்தே இவர் பண்ணும் நைச்சியாநுஸந்தானத்தை நோக்கி இவருக்கு வளவேழுலகு தலே யெடுத்ததாக அதிசங்கைபண்ணி எம்பெருமான் அலமருகிறதைக் கண்டு ஆழ்வார் அவஃனத் தேற்றியதாகவுள்ளது,

21. பழைய அச்சுப்பிரதிகளில் காணும்வ்யாக்யான பாடத்தையே சுத்தபாடமாகக் கொள்ளுமவர்கள் அந்தாமத்தன்பில் தலேயெடுத்த வளவேழுலகு எம்பெருமான் நிஃனவால் மட்டுமாகையாலும், அதற்குப் பரிஹாரமும் முதற்பத்தில் நேர்ந்த தத்துகளின் பரிஹாரம் போலல்லாது வேறுபட்டிருக்கையாலும், அந்தாமத்தன்பில் நேர்ந்ததை ஒரு தத்தாக ஏற்பதற்கில்லே யென்கிருர்கள்.

22. கீழ் எழுந்த கேள்விகளுக்கெல்லாம் உயிரான கேள்வி ஒன்றுண்டு. அதற்கு ஏற்குமான பதில் கிடைத்தால் கீழ் எழுந்த மற்ற கேள்விகளுக்கெல்லாம் பதில் தன்னடையே கிடைக்கும். அதனுல் தான் அதை நான் உயிரான கேள்வி என்று விசேஷணமிடுவது. அக்கேள்வியாவது :

23. அந்தாமத்தன்பில் நேர்ந்ததுபோல, பூர்ண ஸம்ச்லேஷம் நடவாநிற்கச் செய்தே, ஆழ்வார் பண்ணும் நைச்சியாநுஸந்தானம் காரணமாக, அவர் அகலநிஃனத்திலராகிலும் அவருக்கு வளவேழுலகு நோய் தலேயெடுத்ததாக எம்பெருமான் அதிசங்கை பண்ணின விடத்தை எம்பெருமான் நிஃனவாலே ஒருதத்தாக ஆசார்யஹ்ருதய காரர் கொண்டாரா? என்று. இந்தக் கேள்விக்குப் பதில் கண்டு

கொள்ள ஒரு எளிதான வழியுண்டு. அவ்வழியாகக் கிடைக்கும் பதில் எல்லாரும் ஏற்கும்படியானதாகவும் அமைகிறது. அதை எடுத்துக் காட்டுவதே இந்த வியாஸத்தின் முக்ய நோக்கு.

24. அந்தாமத்தன்பில் நேர்ந்ததை ஒருதத்தாக நாயனர் கொண்டதாக முடிவு கிடைத்தால் வளவேழுலகில் நேர்ந்தது ஒரே தத்துத்தான், அஸக்ருத்தல்ல என்றும், அந்தாமத்தன்பிலுள்ள "அல்லாவியுள்கலந்த" "என்முடிவு காணுதே என்னுள் கலந்தானை" என்ற பாசுரங்களும் மாமுனிகளுடைய வ்யாக்யானத்தில் நிச்சயமாக உதாஹரிக்கப்பட்டிருக்கவேண்டும் என்றும், இந்தப் பாசுரங்களையுமடக்கியுள்ள பாடமே சுத்த பாடமென்றும் தன்னடையே தேறும்.

25. அந்தாமத்தன்பில் நேர்ந்ததை தத்தாகக்கொள்ளாமல்பழைய அச்சுப்ரதிகளில் காணும் பங்க்திகளை சுத்த பாடமாகக் கொண்டு வளவேழுலகிலும் பொருமா நீள்படையிலுமே மூன்று தத்துக்களும் நேர்ந்ததாகக் கொண்டால் என்னுகும் என்பதைச் சற்று விசாரிப்போம். எட்டாம்பத்தில் ஏழாந்திருவாய்மொழி இருத்தும் வியந்து, எட்டாவது கண்கள் சிவந்து. இப்பதிகத்தின் நூற்றந்தாதிப் பாசுர வ்யாக்யான அவதாரிகையில் பிள்ளைலோகம் ஜீயரருளிச் செய்வதாவது "இருத்தும் வியந்தில் பெரிய ப்ரீதியோடே யநுபவிக்கிறவளவில் சிறியேனுடைச் சிந்தையுள் என்று நம் பெருமைக் கெதிர்த்தட்டான தம் சிறுமையை யநுஸந்தித்தார்; இவர் இன்னும் வளவேழுலகு தலையெடுத்து நம்மை விட்டகலவும் கூடும். அதுக்கிடமறும்படி........" என்று.

26. இவ்விடத்து ஈட்டு ப்ரவேசத்தில் "மாயக்கூத்தனில் இவர்க்கோடின விடாயெல்லாம் ஆறும்படி வந்து ஸம்ச்லேஷித்து, தன் விடாயும் தீர்ந்து, இவரைப் பெற்ற பேற்றாலே ப்ரீதனய், நினைவின்றிக்கே யிருக்கச் செய்தே இங்ஙனே சேர விழுந்தது. இனி ப்ரவ்ருத்தமான ஸம்ச்லேஷம் சிதிலமாக வொண்ணுது. இவராகிறார் வளவேழுலகிலாழ்வாராயிற்று. நம்மைக் கிட்டக்கொள்ள "சிறியேனுடைச் சிந்தை" என்று தம் அயோக்யதையை அநுஸந்தித்தவர் இங்ஙனம் அதுபின்னுட்டி அகலப் பார்ப்பர். ஏற்கவே பரிஹரிக்க வேணும் என்று பார்த்து" என்றருளிச் செய்து, பின் எம்பெருமான் பரிஹரித்தபடியை அருளிச் செய்கிறார் வடக்குத்திருவீதிப்பிள்ளை.

27. இந்த ப்ரவேசத்திற்கு அநுகுணமாக எழுந்தது "மூன்று தத்துக்குப் பிழைத்த அருவினை நோய் மறுவலிடாமல்" என்ற ஆசார்ய ஹ்ருதய சூர்ணை. அதாவது எம்பெருமானுடைய திருவுள்ளத்தில் ஆழ்வாருக்கு வளவேழுலகு நோய் தலையெடுக்குமோ! என்ற அதிசங்கை எழுந்தது. அது நேராதபடி அவன் பரிஹரித்தான் என்று. அருவினை நோய் மறுவலிடாதபடி பரிஹரித்தான் என்ப

தோடு நில்லாமல் மூன்று தத்துக்குப் பிழைத்த அருவினை நோய் என்று விசேஷணமிடுகிறார் நாயனார். இதிலிருந்து ஒரு தீர்ந்த முடிவு தேறி நிற்கிறது. அதாவது ஆசார்ய ஹ்ருதயத்தில் ப்ரஸ்தாவிக்கப் பட்ட மூன்று தத்துக்களுக்குப் பின் எம்பெருமானுடைய திருவுள்ளத்தில் ஆழ்வாருக்கு வள வேழுலகு நோய் தலையெடுக்குமோ என்ற அதிசங்கை முதன் முதலாக எழுந்தது எட்டாம்பத்தில் ஏழாந்திருவாய் மொழியாகிய இருத்தும் வியந்தில்தான் என்று. இங்கு மூன்று தத்துக்களுக்குப் பின் என்பதும் முதன் முதலாக என்பதும் உயிரான சொற்கள்.

28. இது நிற்க: இரண்டாம்பத்தில் ஐந்தாம் திருவாய்மொழி அந்தாமத்தன்பு. இந்தப் பதிகத்தில் நிகழ்ந்ததை தத்தாகக் கொள்ளலாமா என்ற கேள்வியைச் சற்று மறந்திடுவோம். அடுத்த திருவாய் மொழியாகிய வைகுந்தா மணிவண்ணனின் ஈட்டு ப்ரவேசமாவது: "உபய விபூதியுக்தனாய், ஸமஸ்தகல்யாண குணாத்மகனாய், ஸர்வப்ரகார பரிபூர்ணனான தான் தன்படிகளொன்றும் குறையாதபடிவந்துஇவரோடேஸம்ச்லேஷித்து, அந்த ஸம்ச்லேஷந்தான் தன்பேறு என்னுமிடம் தோற்ற ஹ்ருஷ்டனாய், அநாதிகாலம் எதிர் சூழல்புக்குத் திரிந்த வஸ்துவை ஒருபடி ப்ராபிக்கப் பெறுவோமே: இவர் தாம் இனி நம்மை விடிற் செய்வதென் என்று அதிசங்கை பண்ணி...." என்று; முதற் பாட்டவதாரிகையாவது: "அந்தாமத்தன்பிலே ஆழ்வாருடனே வந்து கலந்து தான் பெருப் பேறு பெற்றானாயிருக்கச் செய்தே, இவர் "அல்லாவியுள் கலந்த" என்றும் "என் முடிவு காணாதே யென்னுள் கலந்தான்" என்றும் தன்னுடைய நைச்யத்தை அநுஸந்தித்தவாறே, வளவேழுலகு தலையெடுத்து இன்னம் இவர் நம்மை விடிற் செய்வதென் என்று எம்பெருமானுக்குப் பிறந்த அதிசங்கையை நிவர்த்திப்பிக்கிறார்" என்று.

29. இந்த வைகுந்தா மணிவண்ணன் ப்ரவேசத்தையும் கண்கள் சிவந்து ப்ரவேசத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இரண்டுக்கும் பொருள் ஒத்திருப்பதைத் தவிர மொழியும் ஒன்றே யாயிருக்கும். தத்தைப்பற்றிய பேச்சுக் கிடக்கட்டும். ஈட்டு ப்ரவேசங்களைவிட்டு வைகுந்தாமணிவண்ணன் பதிகத்திலுள்ள பாசுரங்களில் போனாலோ, இருத்தும் வியந்தில் அதிசங்கை ஒரு குளப்படியும் இங்குப் பிறந்த அலமாப்பு ஒரு கடலுமென்னும்படியா யிருக்கும். அதையும் இங்கு சற்று மறந்திடுவோம். இங்கு நாம் தலைக்கட்டக் கோருவது ஒரு சிறிய முடிவுதான். அதாவது இருத்தும் வியந்திற் போலவே அந்தாமத்தன்பிலும் பூர்ணமான ஸம்ச்லேஷம் நடவா நிற்கச் செய்தே ஆழ்வார் தம்முடைய நைச்யத்தை அநுஸந்தித்தவாறே வளவேழுலகு தலையெடுத்து இவர் நம்மை விடிற் செய்வதென் என்ற அதிசங்கை எம்பெருமானுடைய திருவுள்ளத்தில் உதித்தது என்பதுதான். இவ்வளவே நமக்கு இங்கு வேண்டுவது. இதை இல்லை செய்வாரில்லையே! இல்லை செய்யப்போகாரதே!

30. இனி தத்துக்களைப்பற்றிய பேச்சு எழலாம். இரண்டாம் பத்திலுள்ள அந்தாமத்தன்பில் ஆழ்வாருக்கு வளவேழுலகு தலையெடுக்குமோ என்ற அதிசங்கை எம்பெருமான் திருவுள்ளத்தில் உதித்ததாக இப்பொழுது தலைக்கட்டினோம். மூன்று தத்துக்களைப் பற்றிய ஆசார்ய ஹ்ருதய சூர்ணைக் கேற்ப, இம் மூன்று தத்துகளுக்குப் பின்பு அவ்வதிசங்கை எம்பெருமான் திருவுள்ளத்தில் முதன் முதலாக உதித்தது எட்டாம் பத்திலுள்ள இருத்தும் வியந்தில்தான் என்றும் கீழே முடிவு கட்டினோம். ஆசார்ய ஹ்ருதயகாரர் ப்ரஸ்தாவிக்கிற மூன்று தத்துக்களும் முதற் பத்திலேதான் என்று கொண்டால் என்னாகும்? என்று நாம் எழுப்பிய கேள்விக்கு இப்பொழுது பதில் தெளிவாகிறது. அதாவது கீழ் விவரித்த எம்பெருமானுடைய இரண்டு அதிசங்கைகளும் மூன்று தத்துக்களுக்குப் பின் பிறந்தவை என்றும், அவ்விரண்டினுள் எட்டாம் பத்தில் பிறந்த அதிசங்கை இரண்டாம்பத்தில் பிறந்த அதிசங்கைக்கு முந்தியது என்கை அஸம்பாவிதமாகவும் தேறும்.

31. ஆகவே அந்தாமத்தன்புக்கு முன்னமேயே மூன்று தத்துக்களும் நேர்ந்ததாகக் கொள்ள முடியாது: அந்தாமத்தன்பில் நேர்ந்ததையே மூன்றாவது தத்தாகக் கொண்டால்தான், இந்த மூன்றாவது தத்துக்கும் பிழைத்த நோய் மறுவலிடுமோ என்ற அதிசங்கை இருத்தும் வியந்தில் எழப்ராப்தமாகும். ஆகவே அந்தாமத்தன்பில்தான் மூன்ருவது தத்து நேர்ந்தது என்று ஏற்பதைத் தவிர வேறு போக்கில்லையே! ப்ரமாணகதி இதுவாயிருந்தது; பொறுக்கலாகாதோ? என்று ப்ரார்த்தித்து மேலே செல்வோம்.

32. ஆசார்ய ஹ்ருதயகாரர் ப்ரஸ்தாவிக்கிற மூன்று தத்துக்களுள் மூன்ருவது தத்து நேர்ந்தது அந்தாமத்தன்பில்தான் என்று தேர்ந்த பிறகு இத் தத்துக்களைப் பற்றிய வேறு கேள்விகளுக்குப் பதில் தன்னடையே கிடைக்கும். இங்கு தனித்துக் குறிப்பிட வேண்டுவதாவது “ஆழ்வார் அகல நினைத்திலராகிலும், பூரண அநுபவம் நடவாநிற்கச் செய்தே அவர் பண்ணும் அயோக்யதாநுஸந்தானம் காரணமாக அவருக்கு வளவேழுலகு தலையெடுத்ததோ என்று எம்பெருமான் அதிசங்கித்த விடமெல்லாம் அவன் நினைவாலே தத்துக்கள்தான் என்பது ஆசார்ய ஹ்ருதயகாரருடைய திருவுள்ளமாகத் தேறுகிறது.

33. இது நிற்க; ஆழ்வார் தம் சிறுமையை நினைத்து அகலப்பார்த்தது ஜ்ஞானகார்யம். அது நேர்ந்தது வளவேழுலகிலும் பொருமா நீள் படையிலும்; இவரை விட்டுத்தரிக்க வொண்ணுத தன்னுடைய வ்யாமோஹத்தைக் காட்டிப் பரிஹரித்தான் எம்பெருமான். சரமச்லோகத்தில் மாம் என்ற பதத்துக்கு “எனக்கு போக்யமான உன்னையநுபவிக்கப் பெருமையாலே என்னுடம்பில் வெளுப்பைப்பார் என்று சட்

டையை விழவிட்டுக் காட்டுகிறுன்'' என்ற எம்பார் வார்த்தையையும், "என்னை முற்றப்பருகினுன்'' என்றவிடத்து "ஒருசேதனனைப் பெற்ருனகில் உஜ்ஜீவித்தல், இல்லையாகில் நாவிலும் பல்லிலும் நீரற்றுக் கிடத்தல் செய்யும்படியான வ்யாமோஹத்தோடே என்னை முற்றப் பருகினுன்'' என்ற வ்யாக்யான ஸ்ரீஸூக்திகளையும் நினைக்கலாகிறது.

34. ஆழ்வாரகலப் பார்த்தது ஜ்ஞான கார்யமாகையாலே, செல்வ நாரணன் என்ற சொற்கேட்டுத் தெளிந்த பின்பு மேலொருநாளும் எழவொண்ணுதபடியாகப் பரிஹ்ருதமாயிற்று. இதற்குப்பின் அந்தா மத்தன்பிலோ இருத்தும் வியந்திலோ ஆழ்வாரகலப்பார்த்திலர். ஆனுலும் அகலப் பார்த்தாரோ என்று அலமரும்படியான அதிசங்கை எம்பெருமானுக்குண்டு. இது இவரை யன்றிச் செல்ல வொண்ணுத வ்யாமோஹ கார்யம். அநாதிகாலம் எதிர் சூழல்புக்குத் திரிந்து கைப்பட்ட வஸ்துவை இழந்தோமாகாதே என்ற அலமாப்பு ப்ரேம கார்யமாகையாலே அஸ்தானேயும் உண்டு, ஆழ்வார்களுடைய பகவத் விஷய மங்களா சாஸநம் போலே. அவ்வப்போது பரிஹரித்துப் போவதொழிய பின்னெழவொண்ணுதபடியான பரிஹாரமில்லை.

35. அந்தாமத்தன்பில் இவ்வதி சங்கை கனக்க எழுந்து ஆழ்வாரால் பரிஹ்ருதமாயிற்று. முதலிரண்டு தத்துக்கள் பரிஹ்ருதமானது எம்பெருமானுலே. இதுவே அவற்றுள் வாசி. "இப்படி மூன்றிடத்திலே வந்து பரிஹ்ருதமானதாகையாலே மூன்று தத்துக்கு இவர் பிழைத்த அயோக்யதாநுஸந்தான நோய்'' என்பது மாமுனிகளுடைய ஸ்ரீ ஸூக்தி; இன்னுரால் என்னுமல் பரிஹ்ருதமான என்று பொதுப்பட அருளிச் செய்தது குறிப்பிடத்தக்கது.

36. எம்பெருமானுடைய அதிசங்கைதான் ப்ரேம கார்யமாகையாலே அஸ்தானேயும் உண்டு; அவ்வப்போது பரிஹரித்துப் போவதொழிய பின்னெழ வொண்ணுதபடியான பரிஹாரமில்லை என்று சொன்னேம். இதுவே ஆசார்ய ஹ்ருதயகாரருடைய திருவுள்ளமும் என்று த்ருடீகரிப்பது போல அமைந்திருக்கிறது பத்தாம் பத்தின் ஸாரமருளிச் செய்கிற சூர்ணை. "ஊரும் நாடு முலகமும் தன்னைப் போல் அவனுடைய பேரும் தார்களுமே பிதற்றக் கற்புவானிடறி'' என்கிறபடியே தம்முபதேசத்தாலே நாடெல்லாம் திருந்தி இவரைக் கொண்டு தான்செய்ய நினைத்த காரியமெல்லாம் தலைக்கட்டினவாறே, "விண்ணுலகம் தருவானுய் விரைகின்ருன்'' என்று இவரைப் பரமபதத்தேற அழைத்துப் போவதாகக் கோரியதை யருளிச் செய்யும் சூர்ணையிது; "மனம் திருத்தி வீடு திருத்தப்போய் நாடு திருந்தினவாறே வந்து விண்ணுலகம்தர விரைந்து'' என்று. நாம் எடுத்த விஷயத்துக்கு உயிரானசொற்கள் "மனம் திருத்தி வீடு திருத்த'' என்பன. ஆசார்ய ஹ்ருதயகாரருடைய அஸாதாரணமான சைலிக்கும் ஆழ்ந்த

கருத்துடைமைக்கும் நிதர்சனமாகும் அவை. மனம் திருத்துவதையும் வீடு திருத்துவதையும் ஒன்று சேர்த்துப் படிப்பது ஆழ்வாரைப் பெறுவதற்கு அநாதிகாலம் க்ருஷிபண்ணிப் போந்த எம்பெருமானுடைய இரு செயல்களுக்கும் நோக்கு ஒன்றே என்று தம்முடைய திருவுள்ளக் கருத்தை வெளியிடுவதற்காக. இவருடைய மனம் திருத்துவதாவது இவர் அயோக்யதாநுஸந்தானம் பண்ணி அகல வொண்ணுதபடி இவர் நினைவைத் திருத்துவது. அவன் வீடு திருத்துவதும் அயோக்யதாநுஸந்தானம் பண்ணி அகல வொண்ணுத தேசமென்று. "இன்னமுமிவர் இங்கே யிருக்கில் அயோக்யரென்றகலுவர், அகல வொண்ணுத தேசத்தேறக் கொண்டு போக வேணும்...." என்பது மாமுனிகளுடைய ஸ்ரீஸூக்தி.

37. இதிலிருந்து நாமெடுத்த விஷயத்துக்கு உபகாரகமான அநேக முடிவுகள் தெளிவுறுகின்றன. வளவேழுலகு தலையெடுக்குமோ என்ற எம்பெருமானுடைய அதிசங்கை ஆழ்வார் இங்கிருக்கும் நாளெல்லாம் நடந்துவரும் என்றும், இருத்தும் வியந்தில் அயோக்யதாநுஸந்தானத்தை நோக்கி மூன்று தத்துக்குப் பிழைத்த நோய் இப்பொழுது மறுவலிடுமோ என்று அதிசங்கித்து, அது மறுவலிடாதபடி எம்பெருமான் ஒருவாருகப் பரிஹரித்தானேயாகிலும் இவ்வதிசங்கை ப்ரேமகார்யமாகையாலே ஒருக்காலும் மறுவலிடாதபடியான பரிஹாரம் ஆழ்வார் இங்கிருக்கும் நாளிலில்லை என்றும், அறவே பரிஹ்ருதமாவது அயோக்யதாநுஸந்தானம் பண்ணி அகலவொண்ணுத தேசத்தேறப் போனுல்தான் என்றும், ஆழ்வாரை பரமபதத்தேறக் கொண்டு போவதாக அவன் கோரியதற்கு அதுவே காரணமென்றும், இவருக்காகப் பரமபதமும் தனித்துக் கோடிக்க வேண்டும்படி அவனுடைய அபிநிவேசமென்றும், அநேக முடிவுகளை அடக்கியுள்ளது, "மனம் திருத்தி வீடு திருத்த" என்ற சொல் தொடர். தத்துக்களைப் பற்றிய விசாரத்துக்குத் தேவையான முடிவுகளை மட்டுமே இங்குக் குறிப்பிடுகிறோம். வேறு பொருள்களும் கொண்டுள்ளது இச்சொல் தொடர்.

38. எம்பெருமானுடைய அதிசங்கை ப்ரேமகார்யமாகையாலும், பொருமாநீள்படைக்குப் பின்பெல்லாம் அஸ்தானேயாகையாலும், அது திரும்ப எழாதபடியான பரிஹாரமில்லை என்பதை விசதீகரிப்பதற்காக இத்தனையும் சொல்ல நேர்ந்தது.

39. அந்தாமத்தன்பின் நூற்றந்தாதிப் பாசுரத்தில் "சந்தாபம் தீர்ந்த சடகோபன்" என்னுமிடத்திற்கு நம் அண்ணு அருளிய அர்த்த புஷ்டியான ரஸோக்தி ஞாபகத்துக்கு வருகிறது. அதாவது "சந்தாபம் தீர்ந்தான் சடகோபன்: ஆனுல் சந்தாபமுற்றுன் வைகுந்தன்" என்று. இது "நந்தன் பெற்றனன் நல்வினையில்லா நங்கள்கோன் வசுதேவன் பெற்றிலனே" என்ற பெருமாள் திருமொழிப்பாசுரத்தை நினைப்பூட்டுகிறது.

40. அவன் படுகிற அலமாப்பைக்கண்டு அவனுடைய அதி சங்கையை நிவர்த்திப்பதற்காக எழுந்தவை வைகுந்தா மணி வண்ணன் பாசுரங்கள். அந்த அதிசங்கைதான் அஸ்தானேயாகை யாலே அதை நிவர்த்திப்பதற்காக ஆழ்வார் படும்பாடு பாட்டுத் தோறும் காணலாம். தெய்வமறியும் என்பது பழமொழி. ஆனால் இங்கு அவனுடைய அதிசங்கையைப் பரிஹரிப்பதற்காக ஆழ்வார் பட்டபாடு எம்பெருமானுலுமறியப் போகாது. ஆழ்வாரொருவரே யறிவர். அர்ஜுநனுக்கு (மாசுச:) சொல்லப் பதினெட்டத்யாயம் வேண்டிற்றுனைப்போலே, எம்பெருமானுக்கு ஆழ்வார் மாசுச: சொல் லும்போதைக்குப் பத்துப்பாட்டும் வேண்டியிரா நின்றது.

41. ப்ரகரணத்துக்குச் சேருமான இன்னொரு விஷயம் இங்கு விஜ்ஞாபிக்க விரும்புகிறேன். மின்னிடைமடவாரிலும் அகலுகைக் கடியென்று தோன்றும்படியான "கழகமேறேல் நம்பீ", "போகு நம்பீ" போன்ற அநுஸந்தானங்களுண்டு! இவை ப்ரணயரோஷத் தால் வந்தவை. அயோக்யதாநுஸந்தானத்தாலல்ல. "ஈச்வரன் முன்னே வந்து நின்றாலும் "வா" என்பாரையும் கிடையாத ஸம் ஸாரத்திலே, அவன் அல்பம்தாழ்த்தானென்ன, "போ" என்பாரைப் பெறுவதே" என்று ரஸஜ்ஞர்களான எம்பார் போல்வாரும், "போ" என்று பேச்சுப்பெற்றதை பெரும்பேறாக நினைத்த எம்பெருமான் தானும், விரும்பிப் போருவதொன்றிறே இது. இவ்விடத்து ஈட்டு ஸ்ரீஸூக்தியாவது: "இனி, இத்திருவாய்மொழி தன்னை, பூர்வாசார் யர்கள், பகவத்விஷயத்தில் ஸாபத்ந்யம் தோற்ற வார்த்தை சொல் லுகை சேஷத்வ லக்ஷணமன்று; வளவேழுலகிற்படியே அயோக்யதாநுஸந்தானம் பண்ணுகிறார் என்று நிர்வஹிப்பர்கள். இத்தை பட்டர் கேட்டு "என் சொன்ன ரானார்கள்! இவர்க்கு பகவத்விஷயத்திலுள்ள ருசிக்கு ப்ரகாசகம் இத்திருவாய்மொழியாயிருக்கும். இதற்கு வேறேயொரு வழியிடு வதே! ஆனபின்பு இதுவே பொருளாமித்தனை" என்று. ஆகவே இங்கு வளவேழுலகு தலையெடுத்ததாகக்கொள்ள ப்ரஸக்தியில்லை.

42. அந்தாமத்தன்பில் ஒருதத்து என்று தேர்ந்தபின் வளவே ழுலகுப் பதிகத்தில் ஒருதத்துத்தான், அஸக்ருத்தல்ல, என்றமுடிவும் தன்னடையே வரும். ஆனாலும் அப்பதிகத்தின் சொற்போக்கு இதற்குச் சேரும்படி எங்ஙனே என்பதையும் சற்று விசாரிப்போம். "இன்றென்னைப் பொருளாக்கித் தன்னை என்னுள் வைத்தான்" என்ற பாட்டுக்கு வ்யாக்யானம் வெகு ரஸகனமானது. ஆழ்வா ருக்கும் எம்பெருமானுக்கும் நீண்டதொரு ஸம்வாதமாக அமைத் தருளிச் செய்யப்படுகிறது. "ஒன்றெனக்கருள் செய்ய உணர்த்த லுற்றேனே" என்ற ஆழ்வாருடைய கேள்விக்கு பதிலை பஹுவித மாக யோஜித்து, பதிலளிக்க எழுந்தால் என்னவிதமாக முடியும் என்று எதிர்பார்த்து, இதற்கு உத்தரமில்லையென்று போக்கற்று

நிற்குமிடம் இது. இங்கு பட்டருடைய உருக்கமான நிர்வாஹமொன்றும் அருளிச்செய்யப்படுகிறது: "இதுக்கு ஈச்வரன் சொன்ன உத்தரமென்?" என்று ஜீயர் பட்டரைக்கேட்க, "இவர் தலையிலே ஒருபழியை ஏறிட்டு நெடுநாளிழந்த நாம் சொல்லுவதென்? என்று லஜ்ஜாவிஷ்டனாய்க் காலாலே தரையைக்கீறி நிற்குமித்தனை போக்கி வேறு உத்தரமுண்டோ என்றருளிச்செய்தார்" என்று. இதையடியொற்றிய ஆசார்யஹ்ருதயகாரரும் இதிலீடுபட்டு, இந்த ஸம்வாதத்தை விஸ்தரித்து "மாயையை மடித்து" என்றாரம்பித்து அநேக வரிகளுக்குப்பின் "நிருத்தரம் என்று கவிழ்ந்து நிற்க" என்று கடல்மண்டினாரைப்போலே அவன் போக்கற்றதை யருளிச்செய்து, இதைப்பின்னும் த்ருடீகரிக்க நினைத்து "அமந்த்ரஜ்ஞோத்ஸவ கோஷம்போலே" என்று பின்வரும் சூழ்விசும்பணி முகிலுக்கு அவதாரிகையிடுகிறார்.

*43.* வளவேழுலகிலும் வைகுந்தாவிலும் இதேமாதிரி நெஞ்சுளுக்கும்படியான ஸம்வாதங்கள் நிகழ்கின்றன. ஆனால் "இன்றென்னை"ப் பாட்டில்போல் வ்யாக்யாதா விவரிக்க வேண்டாதபடி இவ்விரண்டு பதிகங்களிலும் ஆழ்வார்தாமே நீண்ட ஸம்வாதமாக பாட்டுக்களை அமைத்திருக்கிறார். அஸக்ருத் தத்தைப்பற்றிய விசாரம் வளவேழுலகில் மட்டும் எழுந்ததாகையாலே இப்பதிகத்திலுள்ள ஸம்வாதத்தை ஈட்டுப்பங்க்திகளைக் கொண்டே சுருங்கச் சொல்லுகிறோம்.

*44.* தூதப்ரேஷண வ்யாஜத்தாலே தம்முடைய ஆற்றாமையை அறிவித்த அநந்தரம் ஆனைக்கு உதவவந்து தோற்றினாப்போலே அரைகுலையத் தலைகுலைய வந்து தோற்றினான். அவனுடைய வைலக்ஷண்யத்தையும் தம்முடைய ஸ்வரூபத்தையும் கண்டார், "நித்யஸூரிகளுக்கு அநுபாவ்யமான வஸ்துவை நாம் புக்கு அழிக்கையாவது என்?" என்று இவர் அகலப்புக, "இவரை இழந்தோமாகாதே" என்று ஈச்வரன், "ஆழ்வீர்! அகலப்பார்த்தீரோ?" என்ன, "அடியேன், அகலப்பார்த்தேன்" என்ன, "நீர் நமக்கு அவத்யம் வருமென்றன்றோ அகலப்பார்த்தது? நீர் அகலுமது காணும் நமக்கு அவத்யம். நாம் குணாகுண நிரூபணம் பண்ணாதே எல்லார் தலையிலும் நம் காலை வைத்தோம் கண்டீரே!" என்று, தான் உலகளந்தருளின ஸௌலப்யத்தைக்காட்ட, "ஆகில் கிட்டுவோம்" என்று பாரா, "ஒரு குணாதிக்யமேயோ வேண்டுவது? நம்மால் வரும் குணமும் அவனுக்கு வேண்டா" என்று அகலப்புக, "உம்மால் வரும் குணாதிக்யமேயன்றோ வேண்டாதது? உம்மால் வரும் நான் தான் வேணுமோ, வேண்டாவோ? நீர் அயோக்யரென்று அகலுமதிலும் ஸம்ச்லேஷிக்கிறது திருவாய்ப்பாடியில் யசோதாதிகள் வெண்ணெயோபாதி நமக்கு தாரகங்காணும். நீர் அகலுவது நமக்கு ஸத்தாஹாநி" என்ன, "பாவபந்தமுள்ளவர்களுடைய வெண்ணெய்

உனக்கு தாரகம்; அதில்லாத என்னோட்டை ஸ்பர்சம் உனக்கு நஞ்சு" என்ன, "நஞ்சோதான்? நஞ்சானமை குறையில்லையே?" என்றான் அவன்; இவரும் "இது நஞ்சே. இதுக்கொரு குறையில்லை" என்றார்; "ஆனால் பூதனையுடைய நஞ்சு தாரகமான நமக்கு ஆகாததில்லை காணும்" என்ன, இவரையன்றிச் செல்லவொண்ணாத அவனுடைய வ்யாமோஹத்துக்குத் தோற்று, "வானோர் தனித்தலைவன் மலராள் மைந்தன் எவ்வுயிர்க்கும் தாயோன், தம்மானென்னம்மான் அம்மா மூர்த்தியைச் சார்ந்தே, மாயோம்,—(இரண்டு தலையையும் அழித்துக் கொள்ளக்கடவோமல்லோம்)" என்றும்,

சார்ந்தவிருவல் வினைகளுஞ்சரித்து மாயப்பற்றறுத்துத்
தீர்ந்துதன்பால் மனம்வைக்கத்திருத்தி வீடுதிருத்துவான்

என்று "அல்லேன்" என்று அகலாதே தனக்கே தீர்ந்து தன்பக்கலிலே நெஞ்சைவைக்கும்படி திருத்தி, இனியிவர் அகலவொண்ணாத படியான தேசத்தேறக் கொடுபோவானாய், அந்த கலங்காப்பெரு நகரத்துக்கும் புதுமை பிறப்பிப்பதாகப் போனான் என்று ஆழ்வார் தாமே சொல்லலாம்படியன்றோ அவன் திருத்தியது.

45. வைகுந்தாமணிவண்ணனில் அவனுக்கு மாசுச: சொல்ல இவருக்குப் பத்துப்பாட்டும் தேவையானாப்போலே, அயோக்ய ரென்று அகல நினையாதே தன்பால் மனம் வைக்கத்திருத்தியதைப் பேசுவதற்கும், நடுவில் நிறுத்தவொண்ணாதபடி பத்துப்பாட்டும் வேண்டிற்றிறே. ஆகவே ஆசார்யஹ்ருதயகாரர் கொண்டபடி இதை ஒரு தத்தாகக்கொள்ளக் குறையில்லையே. இங்கு நேர்ந்த தத்து அஸக்ருத்தா என்ற கேள்வி எழுந்தால் வைகுந்தா பதிகத்திலும் எழப்ராப்தமாகும். இருத்தும் வியந்துக்குமுன் மூன்று தத்துக்கள் தான் என்ற ஆசார்யஹ்ருதயகாரருடைய கருத்துக்குச் சேராது.

46. ஒரு சிறு விஜ்ஞாபனத்துடன் இக்கட்டுரையை நிறுத்திக் கொள்ளுகிறேன். "நின்றவாறும், இருந்தவாறும், கிடந்தவாறும்" என்று ஆழ்வார் பாடாநிற்க, இவையெல்லாம் தொட்டிலிலே என்று எம்பெருமானாரருளிச் செய்ததாக ஈடு ஸ்ரீஸூக்தியுள்ளது. அதுபோலவே "என் அவாவறச் சூழ்ந்தாயே" என்னும் வரையில் ஆழ்வாருடைய அநுபவமெல்லாம் மானஸிகமாகவே என்பது சொல்லத்தேவையில்லை. .... .... .... .... *

# பத்ராதிப விஜ்ஞாபனம்

ஸ்ரீவில்லிபுத்தூர் ப்ராந்தத்தில் அவதரித்து இளமையிலேயே வைதிக லௌகிக பாஷைகளில் அபாரமான ஞானம் பெற்று, நமது நாட்டில் மட்டுமன்றிக்கே பிற நாடுகளிலுமுள்ள மஹாமேதாவிகளால் விஜ்ஞானகலாவல்லபரென்று கொண்டு பல விருதுகளளித்துக் குலாவப்பட்டு, தற்காலம் டில்லிமாநகரில் மிக ப்ரதிஷ்டிதராக விளங்கி வரும் ஸ்ரீஉவே. K. S. க்ருஷ்ணன் ஸ்வாமியை அறியாதாரில்லை. இந்த ஸ்வாமியின் மஹாமேதையில் ஈடுபடாதாருமில்லை. கீர்த்தி மூர்த்தியாக விளங்கும் ஸ்ரீமத் திருக்கண்ணபுரம் பட்டப்பா ஸ்வாமியின் திருக்குமாரரோடுகூட இந்த ஸ்வாமி சில வருஷங்கள் டாக்காவில் எழுந்தருளியிருந்தார்; அப்போதே இந்த மஹானுக்கு ஏற்பட்டிருந்த ஸம்ப்ரதாய ஜ்ஞான அதிசயத்தைக் கண்டு வியந்த அந்த பட்டப்பாஸ்வாமி திருக்குமாரன் (ஸ்ரீ விஜயராகவன்) எனக்குப் பல கடிதங்கள் மூலமாகவும் ஸமக்ஷ ஸம்பாஷணை மூலமாகவும் இவருடைய மேதையை மிகமிக மெச்சித் தெரிவித்திருந்ததுண்டு. ப்ரக்ருதம் சில மாதங்களாக சர்ச்சிக்கப்பட்டு வருகிற மூன்று தத்து விஷயத்தில் இந்த மஹானுடைய ஆராய்ச்சியொன்று வெளிவர வேணுமென்று ஆசைப்பட்ட அடியேன் விண்ணப்பமெழுதி ப்ரார்த்திக்க நினைத்திருக்கையில் இவர் திடீரென்று நேர்ந்த ஹ்ருதயகோச சைதில்ய வியாதியினால் அஸ்வஸ்தராயிருப்பதை யறிந்து வருந்தியிருந்தேன். பகவத் பாகவத க்ருபையால் ஸ்வஸ்தராகி எதிர்பாராதபடி அவர் தாமே யெழுதி யனுப்பிய வியாஸத்தை 20-12-57 தேதியில் பெற்று, இது நிர்ஹேதுகமான ஆழ்வார் திருவருளால் அவதரித்த வியாஸமென்று உண்மை யுணர்ந்து உடனே இதைப் பிரசுரம் செய்யலானேன். '**மிக ஆழ்ந்த மாஞானி இவர்**' என்பதை உலகம் அறுதியிட இந்த வியாஸத்தில் சில சில பங்க்திகளே போதும்.

எவ்வளவு போக்யமாயிருந்தாலும் விஸ்தாரமாயிருப்பது பற்றிச் சிலர் பூர்த்தியாக இதை வாசிக்க மனங்கொள்ளா திருக்கவுங்கூடும். அன்னவர்கள் இதில் 20, 23 தொடங்கி 31 வரை; ஆக இந்தப் பாராக்களை மட்டும் உற்று நோக்கினாலும் தெளிவுபெற வழியுண்டு. இவ்விஷயத்தில் அடியேன் நூற்றுக்கணக்கான பக்கங்களெழுதி யிருந்தாலும் மேலே யெடுத்துக்காட்டின பாராக்களில் கண்ட ஸாராம்சங்களை அடியேனும் இந்த மஹானுடைய வியாஸங்கொண்டே உணரப் பெற்றேனென்பது உண்மை. இதற்கு உலகமெல்லாம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டதே.

—ப்ர. அ.